salzer

July 27, 2026

To

THE CORPORATE RELATIONSHIP DEPT
M/s.BSE Limited I Floor,
New Trading Ring, Rotunda Building,
P.J.Towers, Dalal Street, Fort,
Mumbai - 400 001

Scrip Code :517059

NATIONAL STOCK EXCHANGE OF INDIA LTD.,
Exchange Plaza, C-1, Block G,
BandraKurla Complex, Bandra (E),
Mumbai – 400 051

Scrip Code : SALZERELEC

Dear Sir/Madam,

Sub: Information pursuant to Regulation 30 of SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 - Newspaper advertisement for transfer of equity shares to IEPF.

Pursuant to Regulation 30 of SEBI (LODR) Regulations, 2015, we enclosed herewith the paper clippings of our Advertisement published in Tamil & English Daily on 27.07.2026, titled Notice – Transfer of shares to Investor Education and Protection Fund. The same is being posted in the Company's website.

Kindly take on record.

Thanking you,

Yours faithfully,
For SALZER ELECTRONICS LIMITED

MURUGESAN.K.M.

Digitally signed by MURUGESAN.K.M.
Date: 2026.07.27 16:08:48 +05'30'

K M MURUGESAN
COMPANY SECRETARY

Encl : as above

இளைஞர்கள் சாதித்துவிட்டனர்

சென்னை, ஜூலை 25: இந்தியாவில் விவசாயிகளைப்போல இளைஞர்கள் சாதித்துக் காட்டியிருக்கின்றனர் என்று திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

இது குறித்து அவர் எக்ஸ் தளத்தில் சனிக்கிழமை வெளியிட்டப் பதிவு:

இந்தியாவின் உழவர்கள் முதலில் சாதித்துக் காட்டினார்கள். இப்போது இளைஞர்கள் சாதித்துக் காட்டியிருக்கின்றனர். நாடு முழுதும் களத்திலும் சமூக ஊடகத்திலும் தங்களது உரிமைகளுக்காகப் போராடி இந்த வெற்றியைப் பெற்றுள்ள இளைஞர்கள் அனைவருக்கும் பாராட்டுகள்.

அதேவேளை, தர்மேந்திர பிரதானின் பதவி விலகல் முற்றல்ல; 3 வேளாண் சட்டங்களைத் திரும்பப்பெற வைத்ததுபோலவே, நீட்டையும் ஒழிப்போம் எனப் பதிவிட்டுள்ளார்.

மார்க்சிஸ்ட் கருத்து: இது குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலர் பெ.சண்முகம் வெளியிட்ட அறிக்கையில், நாடு முழுவதும் கனன்று எழுந்த மாணவர், இளைஞர்கள் எழுச்சியின் பின்புலத்தில் தர்மேந்திர பிரதான் பதவி விலகியுள்ளார். மாணவர்களின் ஏக்கங்கள், உணர்வுகள், எதிர்பார்ப்புகளை மதித்து பதவி விலகுவதாக தர்மேந்திர பிரதான் கூறியிருப்பது ரசிக்க முடியாத நகைச்சுவை.

கடந்த 12 ஆண்டுகளில் 152 தேர்வுகளில் கேள்வித்தாள் கசிவு நிகழ்ந்திருக்கிறது. எனவே, 'கரப்பான் பூச்சி ஜனதா' இளைஞர்கள் நடத்திய போராட்டம் ஒரு நீட் கேள்வித்தாள் கசிவோடு சுருங்கிவிடக் கூடியதல்ல. நீட் தேர்வை முற்றிலும் ரத்து செய்ய வேண்டும்' என்று கூறியுள்ளார்.

தலைமைச் செயலகத்தில் 10-ஆவது மாடிக்கு மாறுகிறது முதல்வர் விஜய்யின் அலுவலகம்

சென்னை, ஜூலை 25: முதல்வர் ஜோசப் விஜய்யின் அலுவலகம் தலைமைச் செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையின் 10-ஆவது தளத்துக்கு மாற்றம் செய்யப்படுகிறது. இதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

350 ஆண்டுகளுக்கும் மேலாக பாரம்பரியம்மிக்க புனித ஜார்ஜ் கோட்டையின் முதல் தளத்தில் முதல்வர் விஜய்யின் அலுவலகம் அமைந்துள்ளது. முன்னாள் முதல்வர்கள் பயன்படுத்திய இந்த அறைக்கு அருகே சட்டப்பேரவை, அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளின் அலுவலகங்கள் அமைந்துள்ளன. இந்நிலையில், இடப்பற்றாக்குறை காரணமாக முதல்வரின் அலுவலகம் தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையின் 10-ஆவது தளத்துக்கு மாற்றம் செய்யப்படுகிறது.

இந்தக் கட்டடத்தில் அமைச்சகங்களின் செயலர்கள், ஆணையர்கள், இயக்குநர்களின் அலுவலகங்கள் அமைந்துள்ளன. 10-ஆவது தளத்தில் கூட்ட அரங்கம் அமைந்துள்ளது. இங்கு முதல்வர் தலைமையில் மாவட்ட ஆட்சியர்கள், அதிகாரிகளின் கூட்டங்கள் நடைபெறுவது உண்டு.

இந்த நிலையில், இந்தத் தளத்தை முழுமையாக முதல்வரின் அலுவலகமாக மாற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற்காக, அந்தக் கூட்ட அரங்கத்தை அகற்றும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. புதிதாக அமைக்கப்படும் முதல்வர் அறையிலிருந்து ஒருபுறம் கடற்கரையும், மறுபுறம் சென்னை மாநகரத்தையும் பார்க்க முடியும். முதல்வரின் அலுவலகம், தனிச் செயலர்கள் அலுவலகமாக ஆகஸ்ட் மாதத்தில் இடமாற்றம் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

வாஸ்துபடி சரியில்லை... தற்போதைய முதல்வர் அலுவலகம் வாஸ்துபடி சரியில்லை என்றும், தவெக ஆட்சி தொடர முதல்வர் விஜய் உச்சத்தில் உள்ள இடத்தில் இருந்து நிர்வாகம் செய்ய வேண்டும் என்றும் ஜோதிடரின் அறிவுறுத்தலின் பேரில் இந்த இடமாற்றம் செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது.

துணை நகரமாக உருவெடுக்கிறது புதிய தலைமைச் செயலகம்

புனித ஜார்ஜ் கோட்டையில் அமைந்துள்ள தலைமைச் செயலகத்தை முழுமையாக தனி துணை நகரமாக சென்னைக்கு வெளியே மாற்றம் செய்ய தமிழக அரசு திட்டமிட்டு வருகிறது. சென்னை புறநகர் பகுதியில் அனைத்து வசதிகளுடன் கூடிய துணை நகரத்தை உருவாக்கி அங்கு விசாலமான தலைமைச் செயலகம், அலுவலகங்கள், எம்எல்ஏ-க்கள் தங்கும் விடுதிகள் ஆகியவற்றை அமைக்கவும் திட்டமிடப்பட்டு வருகிறது.

கடந்த 2003-ஆம் ஆண்டில் குயின் மேரிஸ் கல்லூரி வளாகத்தில் தலைமைச் செயலகம் கட்ட அப்போதைய முதல்வர் ஜெயலலிதா திட்டமிட்டு, எதிர்ப்புக் கிளம்பியதால் கைவிட்டார். பின்னர் 2010-இல் ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் தலைமைச் செயலகத்தை அப்போதைய முதல்வர் கருணாநிதி கட்டினார்.

ஆனால், 2011-இல் ஆட்சிக்கு வந்த முதல்வர் ஜெயலலிதா அதை மருத்துவமனையாக மாற்றினார். தலைமைச் செயலகம் புனித ஜார்ஜ் கோட்டையிலேயே செயல்பட்டது.

தவெக எம்எல்ஏவிடம் பேரம் பேசிய வழக்கு: காவல் நிலையத்தில் செந்தில் பாலாஜி ஆஜர்

சென்னை, ஜூலை 25: தவெக சட்டப்பேரவை உறுப்பினர் இளையராஜாவிடம் ரூ.35 கோடி பேரம் பேசியதாகப் பதிவு செய்யப்பட்ட வழக்கில், முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி, அவரது சகோதரர் அசோக்குமார் ஆகியோர் சென்னை திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் சனிக்கிழமை ஆஜராயினர்.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை தொகுதி தவெக சட்டப்பேரவை உறுப்பினர் இளையராஜாவிடம் ரூ.35 கோடி பேரம் பேசியது தொடர்பாக, சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் அவர் கொடுத்த புகாரின் அடிப்படையில், சென்னையைச் சேர்ந்த தேர்தல் கருத்துக் கணிப்பு நிறுவனம் நடத்தி வரும் திருநாவுக்கரசு உள்பட 14 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கில் தொடர்புள்ளதாகக் கூறி முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜி, அவரது சகோதரர் அசோக்குமார் ஆகியோர் விசாரணைக்காக ஆஜராகுமாறு போலீஸார் சம்மன் அனுப்பியிருந்தனர். அவர்கள் ஆஜராகாமல் முன்ஜாமீன் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தை அணுகிய நிலையில், இருவருக்கும் நீதிமன்றம் முன்ஜாமீன் வழங்கியது. மேலும், தினமும் காலை, மாலையில் திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் ஆஜராகி கையொப்பமிட வேண்டும் என்றும் நீதிமன்றம் நிபந்தனை விதித்தது.

இந்த நிலையில், சனிக்கிழமை காலை 10.30 மணியளவில் திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் செந்தில்பாலாஜி, அசோக்குமார் ஆஜராயினர். அப்போது, வழக்கில் கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் ஆடியோ பதிவுகள், வாட்ஸ்ஆப் உரையாடல்கள், பணப் பரிவர்த்தனை தொடர்பான ஆவணங்கள் உள்ளிட்ட ஆதாரங்களின் அடிப்படையில் இருவரிடமும் போலீஸார் விசாரணை நடத்தியதாகத் தெரிகிறது.

'நீட்' தேர்வு வேண்டாம் என்பதில் உறுதியாக உள்ளோம்

அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல்குமார்

திருப்பரங்குன்றம், ஜூலை 25: நீட் தேர்வு வேண்டாம் என்பதில் தவெக அரசு உறுதியாக உள்ளதாகவும், நேரமும் காலமும் வரும் போது, அதற்கான முதல் குரலாக தங்களுடைய குரல் இருக்கும் என்றும் மாநில எரிசக்தி, சட்டத் துறை அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல்குமார் தெரிவித்தார்.

மதுரை திருநகரில் செய்தியாளர்களிடம் சனிக்கிழமை அவர் கூறியதாவது:

தில்லியில் அறவழியில் போராட்டம் நடத்திய மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியதற்கு கடுமையான கண்டனத்தைப் பதிவு செய்தோம். நீட் வேண்டாம் என்பதே தவெக அரசின் நிலைப்பாடு. இந்தத் தேர்வு மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் அதிக சுமையை அளித்து வருகிறது.

நீட் வினாத்தாள் கசிவு விவகாரத்தில் மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலகியது மட்டும் தீர்வாகாது. நீட் தேர்வே வேண்டாம் என்பதே தவெக அரசின் கோரிக்கையாகும்.

நீட் தேர்வை ரத்து செய்வோம் என்று தவறான வாக்குறுதியை அளித்து ஆட்சிக்கு வந்தது திமுக. ஆனால், கடந்த 5 ஆண்டு ஆட்சிக் காலத்தில் இதற்கான எந்தவொரு முன்னெடுப்பையும் அவர்கள் எடுக்கவில்லை. எனவே, தற்போது நீட் தேர்வைப் பற்றி பேச திமுகவினருக்கு தகுதி இல்லை.

நீட் தேர்வு வேண்டாம் என்பதில் தவெக அரசு உறுதியாக உள்ளது. நேரமும் காலமும் வரும் போது, அதற்கு முதலில் குரல் கொடுப்பது தவெக அரசாகத்தான் இருக்கும்.

மேக்கேதாட்டு அணை பிரச்னையில் கடந்த ஒரு மாதமாக முதல்வர் ஜோசப் விஜய் பல கட்ட ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். என்ன செய்ய வேண்டுமோ அதை ஆக்கபூர்வமாக செய்ய வேண்டும். கடந்த திமுக ஆட்சியில் கடிதம் மட்டும் எழுதிவிட்டு, அந்த அரசு மக்களுக்கு துரோகம் செய்தது. இதேபோல, தவெக அரசு செயல்படாது. விவசாயிகளுக்கு தேவையான தண்ணீர் கிடைக்க வேண்டும். அதேநேரத்தில், தமிழகத்தின் உரிமையையும் விட்டுக் கொடுக்கக் கூடாது. இதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முதல்வர் விஜய் வலிமையாக எடுப்பார்.

மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கு தேவையான அனைத்து உதவிகளும் தமிழக அரசின் சார்பில் செய்யப்பட்டுள்ளது. விரைவில் இந்த மருத்துவமனையைத் திறக்க வேண்டும்.

இதேபோல, மதுரை அரசு மருத்துவக் கல்லூரி, அரசு மருத்துவமனை விரிவாக்கப் பணிகளும் தொடங்கியுள்ளன.

விருதுநகரில் ஜனநாயகன் திரைப்படம் திரையிடப்பட்ட திரையரங்கில் தேமுதிக சார்பில் போட்டியிட்ட விஜயபிரபாகரன் தோல்வி குறித்து வெளியிடப்பட்ட விடியோ தொடர்பாக ஆய்வு செய்து வருகிறோம். இந்த விடியோவுக்கும் அந்தத் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினருக்கும் எந்தவித தொடர்புமில்லை. கட்சி நிர்வாகிகள் யாரோ தெரியாமல் செய்திருப்பார்கள் என்றார்.

என்ஆர்காங்கிரஸில் ராமதாஸ் மகள் காந்திமதி?

புதுச்சேரி முதல்வர் ரங்கசாமியுடன் சந்திப்பு

புதுச்சேரி, ஜூலை 25: பாமக தலைவர் மருத்துவர் ராமதாஸின் மகள் காந்திமதி, அவரது மகன் முகுந்தன் ஆகியோர் என்.ஆர்.காங்கிரஸில் விரைவில் இணையவுள்ளனர். இதற்கு முன்னோட்டமாக அவர்கள் இருவரும் புதுச்சேரி முதல்வர் என்.ரங்கசாமியை சனிக்கிழமை சந்தித்து திருநீறு பூசி வாழ்த்து பெற்றனர்.

புதுச்சேரி முதல்வர் ரங்கசாமியை பாமக நிறுவனர் மருத்துவர் ராமதாஸின் மகளும், டாக்டர் அன்புமணி ராமதாஸின் மூத்த சகோதரியுமான காந்திமதி பரசுராமன் (பாமகவின் முன்னாள் செயல் தலைவர்), அவரது மகன் முகுந்தன் பரசுராமன் (பாமக இளைஞரணி முன்னாள் தலைவர்) ஆகியோர் சந்தித்தனர். அப்போது இருவருக்கும் விபூதி பூசி முதல்வர் ரங்கசாமி வாழ்த்து தெரிவித்தார்.

இந்த சந்திப்பு தொடர்பாக என்ஆர்காங்கிரஸ் தரப்பில் விசாரித்தபோது, 'தமிழகத்தில் என்.ஆர். காங்கிரஸ் கட்சியைத் தொடங்குவது குறித்து காந்திமதி, முகுந்தனுடன் ஆலோசிக்கப்பட்டதாகவும், விரைவில் தமிழகம் மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த பாமகவின் பல நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து என்.ஆர். காங்கிரஸ் கட்சியில் சேரவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

முதல்வர் ரங்கசாமி சந்திப்பு தொடர்பாக முகுந்தனிடம் கேட்டதற்கு, 'விரைவில் நல்ல செய்தி வரும் என்றார். மேலும், நாங்கள் ராமதாஸை சந்தித்து அவரது குடும்பமே இல்லை என்று சொல்லிவிட்டோம். அழைப்பு விடுத்தாலும், விடுக்காவிட்டாலும் பாமகவுக்குப் போகவே மாட்டோம். பேசவும் மாட்டோம் எனக்கூறிவிட்டோம் என்றார்.

புதுச்சேரி முதல்வர் என்.ரங்கசாமியைச் சந்தித்த பாமக நிறுவனர் மருத்துவர் ராமதாஸின் மகள் காந்திமதி அவரது மகன் முகுந்தன்.

பாமக முன்னாள் எம்எல்ஏ அருளும் முதல்வர் ரங்கசாமியை வெள்ளிக்கிழமை இரவு சந்தித்துப் பேசியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏற்கெனவே அன்புமணிக்கும், ராமதாஸுக்கும் இடையே ஏற்பட்ட மோதலால் அன்புமணி தனி அணியாகச் செயல்பட்டு, கட்சி நிர்வாகிகள் பிரிந்தனர். தற்போது அன்புமணி தரப்பு ராமதாஸுடன் இணைந்துவிட்ட நிலையில், ராமதாஸின் மகள் காந்திமதியும் அவரைச் சார்ந்தோரும் பாமகவிலிருந்து வெளியேறும் நிலை உருவாகியுள்ளது.

நீட் தேர்வுக்கு எதிரான போராட்டம் வெளிநாட்டின் சதி: சரத்குமார் குற்றச்சாட்டு

தூத்துக்குடி, ஜூலை 25: இந்தியாவில் நீட் தேர்வுக்கு எதிராக நடைபெறும் போராட்டம் வெளிநாட்டின் சதி என பாஜக நிர்வாகியும், நடிகருமான ஆர். சரத்குமார் குற்றஞ்சாட்டினார்.

தூத்துக்குடி விமான நிலையத்தில் சனிக்கிழமை அவர், செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:

தூத்துக்குடி காவல் நிலையத்தில் போலீஸார் தாக்கியதால்தான் அருணாச்சலம் என்ற இளைஞர் உயிரிழந்துவிட்டதாக அவரது தாய் கூறியுள்ளார். இதுகுறித்து தமிழக அரசு விசாரணை செய்து, உண்மை அறிக்கையை வெளியிட வேண்டும்.

தற்போது நீட் தேர்வுக்கு எதிராக நடைபெறும் போராட்டம் எதற்காக என்று புரியவில்லை. நீட் தேர்வு இருக்கக் கூடாது என்று சொல்வது நியாயம் இல்லை. நீட் தேர்வு 2013இல் ஆரம்பிக்கப்பட்ட போது 6 லட்சம் பேர் எழுதி வந்த நிலையில், தற்போது 23 லட்சம் பேர் எழுதுகின்றனர். நீட் தேர்வுக்கு எதிரான போராட்டம் வெளிநாட்டின் சதி. இதற்கு இளைஞர்கள் உடன்பட்டு விடக்கூடாது. எதற்காக இது செய்யப்படுகிறது என்பதை உணர்ந்து செயல்பட்டால் போதும்.

இளைஞர்கள் அதிகமாக இருக்கும் நமது நாட்டில் அவர்களை சிறப்பாக வழிநடத்தும் பொறுப்பு நமக்கு இருக்கிறது. இந்தியாவை உலக அளவில் பார்க்கச் செய்த பிரதமர் மோடி வழிநடத்தும் போது இதுபோன்று செய்வது நாட்டுக்கு எதிரான சதி என்றுதான் சொல்வேன். எனவே, பொருளாதார அடிப்படையில் உயர்ந்து வரும் இந்தியாவை சீர்குலைக்கும் சதியில் நாம் சிக்கிக் கொள்ளக் கூடாது என்றார்.

ராமதாஸ் வழிகாட்டுதல்படி பாமக செயல்படும்

விழுப்புரம், ஜூலை 25: பாமக நிறுவனர் ராமதாஸ் அரசியலில் இருந்து துறவறம் பெறுவது அவரது முடிவு. இருந்தாலும் அரசியலில் யாருக்கும் ஓய்வு இல்லை. அவரது வழிகாட்டுதலின்படி செயல்படுவோம் என்று அன்புமணி ராமதாஸ் தெரிவித்தார்.

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தை அடுத்த கோனேரிக்குப்பம் தனியார் கல்லூரியில் சனிக்கிழமை நடைபெற்ற பாமக நிறுவனர் மருத்துவர் ச.ராமதாஸ் பிறந்த நாள் விழாவில் பங்கேற்ற அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:

பாமக நிறுவனர் ராமதாஸ் அரசியலில் இருந்து துறவறம் பெறுவது அவரது சொந்த முடிவு. இருந்தாலும் எங்களைப் பொறுத்தவரை அரசியலில் யாருக்கும் ஓய்வு இல்லை. அந்த வகையில் மருத்துவர் ச.ராமதாஸின் வழிகாட்டுதலின்படி பாமக செயல்படும். நீட் தேர்வு குளறுபடிகளுக்கு மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பொறுப்பேற்று பதவி விலகியிருப்பது வரவேற்புக்குரியது.

மேக்கேதாட்டு அணையைக் கட்டுவோம் எனக் கூறி வரும் கர்நாடக முதல்வரிடம் பேச்சுவார்த்தை நடத்துவதால் எந்த தீர்வும் ஏற்பட்டு விடாது. தமிழக முதல்வர் ச.ஜோசப் விஜய் ஆக.3-ஆம் தேதி கர்நாடகம் சென்று அந்த மாநில முதல்வரை சந்தித்து மேக்கேதாட்டு அணை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தக் கூடாது. பாமக நல்ல எதிர்க்கட்சியாக செயல்படுகிறது. ஆகையால் தமிழக அமைச்சரவையில் பாமக இடம் பெறவுள்ளதாக கூறப்படுவது எல்லாம் முழு வதந்தி என்றார்.

ராமதாஸ் பிறந்த நாள்: முதல்வர் விஜய், மு.க.ஸ்டாலின் வாழ்த்து

சென்னை, ஜூலை 25: பாமக நிறுவனர் ராமதாஸின் 88-ஆவது பிறந்தநாளையொட்டி அவருக்கு முதல்வர் ஜோசப் விஜய், முன்னாள் முதல்வரும் திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் வாழ்த்துத் தெரிவித்தனர்.

முதல்வர் ஜோசப் விஜய்: பாமக நிறுவனர் ராமதாஸுக்கு எனது இனிய பிறந்த நாள் நல்வாழ்த்துகள். தாங்கள் நல்ல உடல்நலத்துடனும், நீண்ட ஆயுளுடனும் பல்லாண்டு வாழ உளமார வாழ்த்துகிறேன்.

மு.க.ஸ்டாலின்: பாமக நிறுவனர் ராமதாஸுக்கு இனிய பிறந்த நாள் வாழ்த்துகள். சமூக நீதிக்கான பல போராட்டங்களை முன்னெடுத்து, முக்கியக் குரலாக ஒலித்து வந்த தாங்கள் அரசியலில் இருந்து ஓய்வை அறிவித்திருக்கும் நிலையில், தங்களது ஓய்வுக் காலம் மனநிறைவோடும் மகிழ்ச்சியோடும் திகழ விழைகிறேன்.

10 கிலோ எரிவாயு சிலிண்டர்: கோவையில் இந்தியன் ஆயில் நிறுவனம் அறிமுகம்

4 மணி நேரத்தில் விநியோகம்

சென்னை, ஜூலை 25: இந்தியன் ஆயில் நிறுவனத்தின் 10 கிலோ, 5 கிலோ வீட்டு உபயோக எரிவாயு சிலிண்டர் சேவையை அதன் தலைவர் ஏ.எஸ்.சாஹ்னே அறிமுகப்படுத்தினார்.

இது தொடர்பாக அந்த நிறுவனம் சனிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: பொதுமக்களின் தேவைகளைக் கருத்தில்கொண்டு இந்தியன் ஆயில் நிறுவனம் 'இண்டேன் எக்ஸ்ட்ராலைட் நவ்', என்ற இலகு ரக, துருப்பிடிக்காத சிலிண்டரை அறிமுகப்படுத்தியுள்ளது. இது வாடிக்கையாளர்களுக்கு அதிக வசதி, பாதுகாப்பு கொண்டதுடன், எரிவாயு இருப்பை எளிதாகக் கண்காணிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த வகை சிலிண்டர்கள் முன்பதிவு செய்த 4 மணி நேரத்துக்குள் விநியோகம் செய்யப்படும். வாடிக்கையாளர்கள் விரும்பும் நேரத்தில் விநியோகம் மற்றும் குறைந்த ஆவண நடைமுறைகள் உள்ளிட்ட சிறப்பம்சங்களும் உள்ளன.

சென்னையில் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் 10 கிலோ மற்றும் 5 கிலோ எடை கொண்ட வீட்டு உபயோக எரிவாயு சிலிண்டர் சேவையை அந்த நிறுவனத்தின் தலைவர் ஏ.எஸ். சாஹ்னே அறிமுகப்படுத்தினார்.

அப்போது பேசிய அவர், 'முதல் கட்டமாக புணே, குருகிராம், இந்தூர், கோவை ஆகிய நகரங்களில் இந்த வகை சிலிண்டர்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. தொடர்ந்து ஆகஸ்ட் மாதத்தில் இருந்து மேலும் 25 நகரங்களுக்கும், அக்டோபர் இறுதிக்குள் நாட்டின் முக்கிய நகரங்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என்றார்.

வாடிக்கையாளர்கள் Indian OilONE என்ற செயலி, Indian Oil Customer என்ற இணையதளம் மூலம் புதிய இணைப்புகளைப் பெறவும், முன்பதிவும் செய்ய முடியும். விரைவில் 75888 88824 என்ற வாட்ஸ்ஆப் எண்ணின் மூலமும் முன்பதிவு வசதி அறிமுகப்படுத்தப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் இந்தியன் ஆயில் நிறுவனத்தின் இயக்குநர் (மார்க்கெட்டிங்) சௌமித்ரா பி. ஸ்ரீவஸ்தவா மற்றும் நிறுவனத்தின் மூத்த அதிகாரிகள் பங்கேற்றனர்.

BANK BOARD APPROVES ₹20,000-CR FUNDRAISE

IDFC First posts record profit of ₹1,075 cr in Q1

FE BUREAU
Mumbai, July 25

IDFC FIRST BANK more than doubled its fiscal first quarter net profit to ₹1,075 crore due to strong growth in net interest income (NII) and lower provisions, while loan-deposit growth has remained balanced.

The private sector lender had posted a 132.4% lower net profit at ₹463 crore in the year-ago June quarter.

The bank's board has approved an enabling resolution to raise up to ₹20,000 crore through a mix of equity and debt instruments, according to an exchange filing on Saturday.

NII jumped 21.1% year-on-year (y-o-y) to ₹5,972 crore in the June 2026 quarter from ₹4,933 crore a year earlier.

REPORT CARD

IDFC First Bank consolidated financials





Net interest margin (NIM) widened to 5.96% from 5.75% in Q1 FY26. The bank has upgraded its NIM guidance for FY27 to 5.8% from earlier 5.75%. The bank's pre-provisioning operating profit stood at ₹2,553 in the June quarter, up 14% y-o-y.

Provisions fell to ₹1,144 crore from ₹1,659 in the same quarter last year. The bank's asset quality improved, with gross non-performing assets (NPAs) at 1.51% versus 1.97% a year ago and 1.61% in the preceding March quarter.

Net NPA improved to 0.44% from 0.55% a year earlier and 0.48% in the preceding quarter. Loans and advances grew 20% y-o-y to ₹2.98 lakh crore in the June quarter, while deposits rose 18% to ₹3.12 lakh crore.

CASA (current account savings account) deposits grew 25% y-o-y to ₹1.58 lakh crore. The CASA share improved by 283 basis points y-o-y and 102 basis points (bps) to stand at 50.8% as on June 30.

AU SFB profit rises 37% to ₹796 cr in Q1

AU SMALL FINANCE Bank (SFB) on Saturday reported a 37% jump in June quarter profit at ₹796 crore, helped by a lowering in provisions and expansion in the net interest margin (NIM).

The lender, which is on its way to transition to a universal bank, had reported a net profit of ₹581 crore in the year-ago period and ₹832 crore in the quarter-ago period.

Its Executive Director Vivek Tripathi said this is one of the best first quarters in the last many years, and the lender has achieved over 20% of the budgeted business instead of the usual 15% in the first three months of the fiscal year, which are generally presumed to be seasonally soft for the banking system. "There was robust demand despite the headwinds like geopolitics, and the same is seen through our business and also high frequency indicators like growth in GST, e-way bills etc," he said. —PTI

Honda re-enters premium SUV market with ZR-V

AKBAR MERCHANT
Mumbai, July 25

Yujiro Sugino, director, marketing and sales (left) and Kunal Behl, VP (marketing and sales), Honda Cars India with the Al New Honda ZR-V

HONDA CARS INDIA on Saturday re-entered the premium SUV segment with the launch of the ZR-V e:HEV, priced at ₹47.99 lakh (ex-showroom), marking its return to the category after a gap of six years following the discontinuation of the CR-V in 2020. Imported from Japan as a completely built unit (CBU), the ZR-V becomes Honda's flagship offering and the most expensive model in its Indian portfolio.

It will rival premium SUVs such as the Volkswagen Tiguan and Skoda Kodiaq, although its pricing is at the higher end of the segment due to the import duties applicable on fully built vehicles, unlike its locally assembled competitors. Despite the premium pricing, Honda said customer response has been encouraging, with the first two batches of the ZR-V already booked for the Indian market. Deliveries have commenced in select cities, the company said.

Globally, the ZR-V e:HEV has recorded cumulative sales of more than 8 lakh units since its debut in 2022. The SUV is powered by Honda's 2.0-litre strong-hybrid petrol powertrain, which delivers a claimed fuel efficiency of 22.8 km per litre.

"Today marks another important milestone in Honda's journey in India as we commence deliveries of the all-new Honda ZR-V e:HEV. Positioned as our flagship model in India, the ZR-V showcases Honda's global advancements in strong hybrid technology, design, comfort and safety," said Kunal Behl, vice president, marketing & sales, Honda Cars India.

The ZR-V is equipped with Honda's SENSING advanced driver assistance suite that includes a long list of safety tech. Honda is offering the SUV with a three-year unlimited-kilometre standard warranty, along with three years of complimentary roadside assistance.

Customers can opt for an extended warranty of up to seven years, while the firm's Anytime Warranty programme extends coverage to 10 years or 1.2 lakh kilometres.

PhonePe FY26 revenue up 11% to ₹7,920 cr

PRESS TRUST OF INDIA
New Delhi, July 25

DEMONSTRATING STRONG TOP-LINE momentum, PhonePe's consolidated revenue from operations rose to ₹7,920 crore in FY26, according to regulatory filings with the Registrar of Companies (RoC).

This represents a top-line expansion of ₹815 crore, marking an 11.47% increase compared to the previous fiscal year.

As the government is yet to release the UPI Digital Incentive (DI) funds for FY26 to the industry, the revenue associated with DI has not been recognised in FY26. This portion of the FY26-related DI revenue is expected to accrue in PhonePe's FY27 financials.

On a normalised operational basis, PhonePe's net loss for FY26 stood at ₹1,377 crore while the total consolidated net loss was reported at ₹2,792 crore (vs ₹1,727 crore in FY25).

Notably, the FY26 net loss included several one-time items: a one-time ESOP acceleration charge, a non-cash goodwill impairment, a gain on the sale of a partial stake in an associate, and losses from discontinued operations. Beyond core payments, PhonePe continues to deepen its presence as a multi-sector fintech ecosystem.

The firm has successfully secured regulatory licenses to operate across a wide spectrum of financial services.

REPORT CARD

■ This represents a top-line expansion of **₹815 crore**, marking an 11.47% increase compared to FY25

■ Revenue associated with Digital Incentive is yet to be recognised in FY26



Birla Corp Q1 sales up 5%

PRESS TRUST OF INDIA
Kolkata, July 25

BIRLA CORPORATION REPORTED revenue for the June quarter at ₹2,669 crore, a 7% growth over the same period last year, while net profit at ₹116 crore reflects subdued realisation from cement sales and escalation in power and fuel cost. Realisation from cement sales for the quarter was at ₹4,947 per ton, up almost 2% year-on-year (y-o-y), but Ebitda per tonne was 6% lower at ₹675. This was largely on account of a 5% increase in power and fuel cost. The Cement Division's Ebitda margin for the quarter was at 13.6%, down 110 basis points from the same period last year.

Maintaining high capacity utilisation of 98%, Birla Corporation scaled up cement sales in the June quarter to 5.05 MT

Cement demand grew moderately in the June quarter, gaining momentum from the second-half of May, thanks largely to Government spending on infrastructure. But cement prices remained under pressure: price hikes introduced in April-May had to be rolled back in June amid intense competition for market share.

EIL, CSIR-IMMT sign MoU on critical minerals

ENGINEERS INDIA (EIL) has signed a Memorandum of Understanding with the CSIR–Institute of Minerals and Materials Technology (CSIR-IMMT), Bhubaneswar to strengthen collaboration in mineral processing, extractive metallurgy, and the critical and strategic minerals value chain.

Under the pact, EIL and CSIR-IMMT will jointly identify, evaluate, and undertake research and development initiatives in critical and strategic minerals. The tie will also facilitate the exchange of technical expertise, capacity-building programmes, technology scale-up, and the execution of pilot-scale and commercial deployment projects. EIL, a public sector undertaking under the administrative control of the Ministry of Petroleum & Natural Gas (MoPNG), Govt. of India, is a premier engineering consultancy agency providing concept to commissioning services across oil & gas, petroleum, refining, ferrous & non-ferrous, fertilisers, infrastructure and renewable energy sectors.

—FE BUREAU

Many social media links taken down, say Govt sources

PRESS TRUST OF INDIA
New Delhi, July 25

MANY SOCIAL MEDIA links related to an AI-generated deepfake video of Piyush Goyal have been taken down, government sources said on Saturday, as the Union Minister alleged that his remarks to the media outside Parliament were "maliciously" altered in a clip to spread misinformation, and that he has lodged a police complaint on the issue.

The move comes after a purported digitally-altered video of Goyal surfaced on social media, portraying him as making threatening remarks against students participating in the nationwide protests over the NEET examination issue.

In a X post early Saturday, Goyal asserted that irresponsible misuse of artificial intelligence (AI) to mislead the public cannot and will not be tolerated. Government sources told *PTI* that many links related to the AI-generated deepfake video have been taken down.

Minister for Commerce and Industry Goyal, in his post, flagged the altered videoclip of his conversation with the media outside Parliament. He wrote that the video has been maliciously tampered with using AI to create a deepfake, which is being circulated on social media with the intent to spread misinformation.

"I have lodged a complaint with the police in this regard, and today, on July 25, 2026, at 4:35 AM, an FIR (No. 123/26) has been registered at Chanakyapuri Police Station. Strict legal action will be taken against every individual involved in creating, disseminating, or deliberately promoting this fake video," Goyal warned. He urged the public to rely only on verified and authentic sources for information. "I have complete faith that India's aware and tech-savvy citizens, especially our youth, will not fall prey to such misinformation," he further said.

On Friday evening, the PIB fact-check unit too warned that Pakistani propaganda accounts were circulating an AI-generated deepfake video falsely depicting Goyal making threatening remarks about protesting students.

The manipulated video surfaced against the backdrop of the student protests organised by the Cockroach Janata Party (CJP) at Jantar Mantar, New Delhi over irregularities in medical entrance and competitive examinations, and demanding reforms in the education system.

Social media has witnessed a surge in content related to the demonstrations, and authorities have repeatedly cautioned users against relying on unverified videos and posts circulating online.

MALICIOUSLY ALTERED

■ Move comes after a purported digitally-altered video of commerce minister surfaced on social media

■ Goyal wrote in a post that the video has been maliciously tampered using AI to spread misinformation

ELSEWHERE REALTY LLP

A28 Madhuvanam Apt, Chegur, Kanha Shanti Vanam, Chegur, Mahabub Nagar, Kothur, Telangana, India.

FORM NO. URC-2

Advertisement giving notice about registration under Part I of Chapter XXI of the Companies Act, 2013 [Pursuant to Section 374(b) of the Companies Act, 2013 read with Rule 4(1) of the Companies (Authorised to Register) Rules, 2014]

1. Notice is hereby given that, in pursuance of sub-section (2) of Section 366 of the Companies Act, 2013, an application is proposed to be made after fifteen days hereof but before the expiry of thirty days hereinafter to the Registrar, Central Registration Centre (CRC), Indian Institute of Corporate Affairs (IICA), Plot No. 6, 7, 8, Sector 5, IMT Manesar, District Gurugram (Gurgaon), Haryana – 122050 that "ELSEWHERE REALTY LLP", a Limited Liability Partnership incorporated under the Limited Liability Partnership Act, 2008 and having its registered office at A28 Madhuvanam Apt Chegur,Kanha Shanti Vanam,Kothur, Mahabub Nagar,Telangana,509325,India, to be registered under Part I of Chapter XXI of the Companies Act, 2013 as a Company Limited by Shares.
2. The principal objects of the proposed company are as follows:
   To carry on the business of Real Estate Developers, Infrastructure Developers, Land Developers, Builders, Contractors, Property Developers, and for that purpose to own, construct, develop, improve, take on lease or leave and Licence basis or to acquire in any other manner and to hold, manage and operate and to sell or give on lease & licence or deal in any other manner land, plots, houses, apartments, premises, bungalows, flats, units, sheds, shops, offices, shopping malls, godowns, service apartments, hotels, business centres, multiplexes, and other commercial and residential premises, and to provide in connection thereto all facilities and services and to engage in project and construction management services and to execute contracts in relation to infrastructure projects like airports, seaports, roads, bridges, water and sanitation projects, solid waste management, power projects, industrial and technology parks, special economic zones and other projects. To carry on the business to purchase, renovate, repair, rebuild, restructure or to take on rent commercial buildings, residential buildings, shopping malls, industrial property, residential plots business centers, super markets and any other kind of buildings and structures of any description and size for the purpose of holding, selling and disposing off or to give on lease, sublease or to give them on rent.
3. A copy of the draft Memorandum of Association and Articles of Association of the proposed company may be inspected at the office of the applicant situated at: A28 Madhuvanam Apt Chegur, Kanha Shanti Vanam, Kothur, Mahabub Nagar,Telangana, 509325,India during normal business hours on any working day.
4. Notice is further given that any person objecting to this application may communicate such objection in writing, stating the grounds thereof, to the Registrar, Central Registration Centre (CRC), Indian Institute of Corporate Affairs (IICA), Plot No. 6, 7, 8, Sector 5, IMT Manesar, District Gurugram (Gurgaon), Haryana – 122050 within twenty-one (21) clear days from the date of publication of this notice, with a copy thereof to the applicant LLP at its registered office mentioned above.

For, **ELSEWHERE REALTY LLP**
Sd/-
SUNIL KUMAR
(Authorised Representative of Primeur Farmstead Private Limited)
Designated Partner
DPIN: 06966997

Date: 25.07.2026
Place: Kothur

MP BIRLA GROUP

BIRLA CORPORATION LIMITED

CIN: L01132WB1919PLC003334
Regd. Office: 9/1, R.N. Mukherjee Road, Kolkata - 700 001
(An M. P. Birla Group Company)
E-mail: coordinator@birlacorp.com
Website: www.birlacorporation.com
Phone: (033) 6616 6745 / 6729; Fax: (033) 2248 2872 / 7988

EXTRACT OF UNAUDITED CONSOLIDATED FINANCIAL RESULTS FOR THE QUARTER ENDED 30TH JUNE, 2026

(₹ in Crores)

Particulars	Consolidated		
	Quarter Ended 30th June, 26 (Unaudited)	Year Ended 31st March, 26 (Audited)	Quarter Ended 30th June, 25 (Unaudited)
1. Total Income from operations (Net)	2669.41	9772.56	2486.16
2. Net Profit before tax and exceptional items	155.70	775.08	177.38
3. Net Profit before tax after exceptional items	155.70	768.53	177.38
4. Net Profit after tax	115.73	557.58	119.57
5. Total Comprehensive Income for the period (Comprising profit for the period after tax and other comprehensive income after tax)	246.45	426.58	245.83
6. Paid-up Equity Share Capital (Face Value ₹ 10/- Per Share)	77.01	77.01	77.01
7. Reserves (excluding Revaluation Reserve) as shown in the Audited Balance Sheet of previous year	6271.78 (As on 31/03/2026)	6271.78 (As on 31/03/2026)	5925.28 (As on 31/03/2025)
8. Basic and Diluted Earnings Per Share for the period (₹)	15.03	72.41	15.53

Notes :

1. The above results were reviewed by the Audit Committee on 24th July, 2026 and taken on record by the Board of Directors of the Company at its meeting held on 25th July, 2026. The Statutory Auditors of the Company have expressed an unmodified opinion on these financial results.
2. Key Standalone Financial Information:

Particulars	Quarter Ended 30th June, 26 (Unaudited)	Year Ended 31st March, 26 (Audited)	Quarter Ended 30th June, 25 (Unaudited)
Total Income	1466.73	5575.11	1450.66
Net Profit before tax and exceptional items	55.43	413.28	120.59
Net Profit before tax after exceptional items	55.43	356.38	120.59
Net Profit after tax	40.75	249.75	77.87

3. The above is an extract of the detailed format of Unaudited Financial Results filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of Unaudited Financial Results is available on the Stock Exchange website (www.nseindia.com and www.bseindia.com) and on the Company's website (www.birlacorporation.com).

For Birla Corporation Limited

(HARSH V. LODHA)
Chairman
DIN 00394094

Kolkata
25th July, 2026

M P Birla Cement : *Cement se Ghar tak*

salzer ELECTRONICS LIMITED

CIN: L03210TZ1985PLC001535
Registered Office: Samichettipalayam, Coimbatore - 641 047,
Ph : 0422-4233600 / 4233614,
Email : cs@salzergroup.com & Website : www.salzergroup.com

NOTICE TO THE SHAREHOLDERS

(Transfer of shares to Investor Education and Protection Fund)

Notice is hereby given to the Shareholders of Salzer Electronics Limited (herein after referred to "**the Company**") that pursuant to Section 124(6) of the Companies Act 2013 read with Investor Education and Protection Fund Authority (Accounting, Audit, Transfer and Refund) Rules, 2016 and Amendment Rules, 2017 ("Rules"), all Shares in respect of which dividend has not been claimed for seven consecutive years from 2018-2019 will be transferred by the Company in the name of the Investor Education and Protection Fund ("IEPF").

The Company has already posted individual notice to the shareholders concerned advising them to claim the Dividend expeditiously. The details of the shareholders and the shares due for transfer are available on the Company's web site www.salzergroup.net.

In case no valid claim is received for the Dividend on or before August 31, 2026, the equity shares in respect of such Unclaimed Dividend will be transferred to IEPF in accordance with Rules on or before October 12, 2026.

In the event of the shareholders not claiming the Dividend and the related shares are transferred to IEPF, the Shareholders are still entitled to claim the shares from IEPF by making an on-line application in Form IEPF-5 to the IEPF Authority. The procedure and the Form are available at www.iepf.gov.in.

For Salzer Electronics Limited

K M Murugesan
Company Secretary
M No.A25953

Date : July 25, 2026
Place : Coimbatore

Sea TV Network Limited

Regd. Office: 148, Manas Nagar, Shahganj, Agra-282010
CIN: L61104UP2004PLC028650
Website: www.seatvnetwork.com, E-mail: cs@seatvnetwork.com

STATEMENT OF UNAUDITED STANDALONE AND CONSOLIDATED FINANCIAL RESULTS FOR THE QUARTER ENDED 30th JUNE, 2026

(In lacs)

	Particulars	Standalone				Consolidated			
		Quarter Ended			Year Ended	Quarter Ended			Year Ended
		30.06.2026 (Unaudited)	31.03.2026 Audited	30.06.2025 (Unaudited)	31.03.2026 Audited	30.06.2026 (Unaudited)	31.03.2026 Audited	30.06.2025 (Unaudited)	31.03.2026 Audited
1	Total Income from operations	171.21	166.00	220.02	692.43	244.27	399.23	308.09	1,243.52
2	Net Profit/(Loss) for the period (before Tax, Exceptional and/or Extraordinary items)	(50.78)	(48.24)	(1.75)	(150.04)	(44.30)	13.72	22.33	51.17
3	Net Profit/(Loss) for the period after tax (after Exceptional and/or Extraordinary items)	(50.78)	(48.24)	(1.75)	(150.04)	(44.30)	14.33	22.33	51.78
4	Total Comprehensive Income/(Loss) for the period [Comprising Profit/(Loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax)]	(50.78)	(79.31)	(1.75)	14.34	(44.30)	17.84	22.33	55.30
5	Equity paidup share capital	1,202.00	1,202.00	1,202.00	1,202.00	1,202.00	1,202.00	1,202.00	1,202.00
6	Earnings per share (Not annualised) :								
	Basic (Rs.)	(0.42)	(0.40)	(0.01)	(1.25)	(0.37)	0.12	0.19	0.43
	Diluted (Rs.)	(0.42)	(0.40)	(0.01)	(1.25)	(0.37)	0.12	0.19	0.43

1. The above results were reviewed and recommended by the Audit Committee & approved by the Board of Directors at their respective meetings held on 25 July 2026. The financial results for the quarter ended June'30 2026 have been audited by the Statutory Auditors of the Company.
2. "Non Provisioning of Interest on Unsecured Loans The Company has outstanding unsecured loans aggregating ₹3382.81 lakhs as at 30 June 2026, received from directors, related parties, and corporates. These borrowings carry an interest rate of 8% per annum. During the quarter ended 30 June 2026:
   - No interest provision was made for the quarter ended 30 June 2026, amounting to ₹66.49 lakhs.
3. The above is an extract of the detailed format of audited standalone and consolodated Quarterly and yearly Results filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing and Other Disclosure Requirements) Regulations, 2015. The full format of the audited standalone and consolidated Financial Results are available on the Stock Exchange websites, www.bseindia.com and on the company website www.seatvnetwork.com

For Sea Tv Network Limited
Neeraj Jain
Chairman & Managing Director

Place : Agra
Date : 25.07.2026